முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1589

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**04.02.2024,** ஞாயிற்றுக்கிழமை

1. அறம் வேலிகொண்ட அரங்கனே
அருள்பலம் கொண்ட தேசிகனே
வரம்பல பெற்ற ஞானியே
வள்ளலாய் வாழுகின்ற தவசியே
2. தவசியே ஆறுமுக அரங்கனே
தர்மனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
பெருமைபட ஞான அறிவுரை ஆசி
புகலுவேன் சோபகிருது கலைதிங்கள் தன்னில்
(சோபகிருது வருடம் தை மாதம் 21 ம் நாள், 04.02.2024, ஞாயிற்றுக்கிழமை)
3. தன்னிலே அரங்கனுக்கு மகா சக்தி
தண்டாயுதன் யான் கூட்டி நித்தம்நித்தம்
மண்ணுலகில் அற்புதம் நிகழ்த்தி வர
மாதவசி அரங்கனுக்கு சர்வ ஆற்றலும்
4. ஆற்றலும் ஞானபலமும் குறையில்லாத
தர்மபலமும் குவலயமெங்கும் தொண்டர்பலமும் கூட்டி
கூட்டியே ஆறுமுகன் யான்
குறைவின்றி வழி நடத்தி வருகின்றேன்
5. தட்டாது அரங்கன் தர்ம ஞான வழியில்
தவமாக ஏற்று வரும் மக்களெல்லாம்
இட்டம் போல் இந்த கலியிலே ஞானிகளாக
எல்லா வரமும் வளமும் பெற்று சிறந்து
6. சிறந்துமே பேருலகை மாற்றும்
சிறப்புமிக்க ஞானிகளாகவும் மறுப்பின்றி அரங்கன் வழிவழி
தொடருகின்ற மகா சக்திகளாகவும் மாறி இனிதே
அற்புதத்தை இந்த கலியினில் படைப்பர்

7. அனைவரும் உலகமாற்றம் நிகழ்த்தி
அரங்கன் விரும்புகின்ற வண்ணம் காப்புமிக்க
ஞான யுகத்தையும் கலியிடரையே விரட்டுகின்ற
ஞான ஆட்சியையும் அரங்கன் ஆசிபட நிறுவி அற்புதம் படைப்பர்
ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—